செ.வெ.எண்: 28 நாள்: 10.03.2017

**புதுக்கோட்டை மாவட்டத்தில் விவசாயிகளுக்கு ரூ.85.7 கோடி மதிப்பில் வறட்சி நிவாரணம் வழங்கப்படவுள்ளது - மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் தகவல்.**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் இலுப்பூர் வட்டத்திற்குட்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியுதவி தொகைக்கான ஆணையினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சு.கணேஷ்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் இன்று (10.03.2017) வழங்கினார்.

விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண நிதியுதவித்தொகைக்கான ஆணையினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் அவர்கள் வழங்கி கூறியதாவது:

தமிழகஅரசு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. இதன்படி வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித்தொகைகளை தமிழகஅரசு அறிவித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் 6.3.2017 அன்று விவசாயிகளுக்கு வழங்கினார். அதனடிப்படையில் நமது மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு வறட்சி நிவாரண உதவித்தொகைகள் வழங்கும் பணிகள் துவக்கி வைக்கப்பட்டுள்ளது. இதில் இலுப்பூர் வட்டத்திற்குட்பட்ட வறட்சியால் பாதிக்கப்பட்ட 6348 விவசாயிகளுக்கு ரூ.3.9 கோடி மதிப்பில் வறட்சி நிவாரண உதவித்தொகைக்கான ஆணை வழங்கப்பட்டுள்ளது. மேலும் நமது மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 95468 விவசாயிகளுக்கு ரூ.85.7 கோடி மதிப்பீட்டில் வறட்சி நிவாரண நிதியுதவித்தொகை வழங்கப்படவுள்ளது. எனவே இதனை அனைத்து விவசாயிகளும் உரிய முறையில் பெற்று பயன்பெற வேண்டும் என்றும் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்பநலத்துறை அமைச்சர் டாக்டர்.சி.விஜயபாஸ்கர் அவர்கள் கூறினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.அ.ராமசாமி, இலுப்பூர் வருவாய் கோட்டாட்சியர் திரு.மு.வடிவேல்பிரபு, வட்டாட்சியர் திரு.தமிழ்மணி, கூட்டுறவு சங்கத்தலைவர் திரு.ராமசாமி மற்றும் அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**